பக்கங்கள் 6 விலை சதம் 40

RECEIVED
1979 -9-10
PERIODICALS DIVISION

ஈழநாடு

EELA NADU

Registered as a Newspaper at the General Post Office,
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 26 ஷவ்வா 18 இதழ் 211
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-9-79

Montessori Classes
ENGLISH MEDIUM
Mariane Training Centre
(கொழும்பு—யாழ். இணை)
சனி, ஞாயிறு முழுநேர
வகுப்புகள்
ஆரம்பம் 15-9-79
தொடர்பு:
T. லோகநாதன்
கல்வி போதனா நிலையம்
34, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.

சஞ்சய் காந்தி கைது

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வன் திரு. சஞ்சய் காந்தி நேற்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

மாருதி கார்நிறுவனம் தொடர்பான விசாரணைக்காக உத்தரப்பிரதேசத்திலுள்ள டேஇரசன் பட்டண நீதிமன்றத்தில் திரு. சஞ்சய் ஆஜரானபோது அவரது ஆதரவாளர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். அவருடன் இந்திரா காங்கிரஸ் வாலிப இயக்கத்தைச் சேர்ந்த 100 தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். (கு)

அயத்தொல்லா தெல்ஹானி காலமானார்

(தெஹ்ரான்)

ஈரானின் பிரபல அரசியல் தலைவர்களில் ஒருவரான அயத்தொல்லா தெல்ஹானி மாரடைப்பால் நேற்றுக் காலமானார்.

காலித்தொகுதி எம். பி.

பதவி காலி!

விரைவில் இடைத்தேர்தல்

(கொழும்பு)

காலித்தொகுதியிலிருந்து ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. டி. ஜி அல்பிரட் சில்வா பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதையடுத்து காலியாகியுள்ள காலித்தொகுதி இடைத்தேர்தல் விரைவில் நடைபெறும். இந்த ஆட்சிக்காலத்தில் நடைபெறும் முதலாவது இடைத்தேர்தல் இதுவாகும்.

காலித்தொகுதியில் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற டாக்டர் டபிள்யூ. தகநாயக்காவின் தேர்தல் ஆட்சேபணை அப்பீல் மனுவை நேற்று ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியது.

பிரதம நீதியரசர் திரு நெவில் சமரக்கோன், நீதியரசர்கள் திரு ரீ சமரவீரா, திரு ஆர் எஸ் வனசுந்தர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்றம் மனுதாருக்கு செலவுத் தொகையை வழங்குமாறும் தமது ஒருமனதான தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் காலித்தொகுதி எம் பியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு டி ஜி அல்பேர்ட் சில்வாவின் தெரிவு சட்டவிரோதமானது எனத் தீர்ப்பு வழங்குமாறு டாக்டர் தகநாயக்கா ஏற்கனவே தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது தெரிந்ததே.

இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு டாக்டர் தகநாயக்கா அப்பீல் செய்திருந்தார்.

இடைத்தேர்தல்

காலித் தொகுதி ஸ்தானம் காலியாக உள்ளது குறித்து பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதும் இடைத்தேர்தல் நடைபெறும் திகதி பற்றி தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார். (இ)

அச்சுவேலிக் கொள்ளைவழக்கு

எதிரிகள் வராததினால் விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிரிகள் மூவரும் கோர்ட்டிற்கு வராததினால் அச்சுவேலி கொள்ளை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கில் அச்சுவேலி பநோ கூ சங்கத்தில் சுமார் 40, 000 ரொக்கப்பணம் கொள்ளையடித்ததாக அருமைத்துரை, ரமணன், உதயணன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் ஈ தம்பிரத்தினம், 1ம் எதிரி கோட்டிற்கு வரவில்லையென்றும் அவரின் இருப்பிடம் தெரியவில்லையென்றும் கூறினார்.

2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம் சோமசுந்தரம், அவசரகாலச்சட்டம் அமுலாக்கப்பட்ட 2 நாளையின்பின் சி ஐ டியினர் எதிரிகளைப்பற்றி விசாரித்தனரென்றும் அதன்பின் எதிரியை காணவில்லையென்றும் அவர்கள் கடத்தப்பட்டார்களா, தடுத்து வைக்கப்பட்டனரா, உயிரோடிருக்கிறார்களா என்று தெரியவில்லையென்றும் கூறினார்.

3ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசா, எனது கட்சிக்காரரான 3ம் எதிரி எங்கிருக்கிறாரென்று தெரியவில்லையென்றும் விசாரணையை ஒத்திப்போடுமாறும் கூறினார்.

நீதிபதி விசாரணையை டிசம்பர் 7ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஈ)

ஜனாதிபதிக்கு எதிராக துரோக குற்றம் சுமத்துவது தவறல்ல

வாஜ்பாய் கூறுகிறார்

புதுடில்லி, செப். 10

ஜனாதிபதிக்கு எதிராகத் துரோகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக்கூடிய வகையில் இந்திய அரசியல் அமைப்பில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்னாள் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு ஏ. பி. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

எனவே இந்திய பாராளுமன்றத்தைக் கலைத்து இடைக்காலத் தேர்தலுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி துரோகக் குற்றச்சாட்டுச் சுமத்துவது அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்றும் அவர் கூறினார்.

இவ்விவகாரம் குறித்து ஜனதாக் கட்சி அமைத்துள்ள விசேட கமிட்டி ஒன்று விசாரித்து வருகிறது. (இ)

ஜீப்-வான் மோதல்

ஒருவர்பலி! இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

எதிரெதிராக வந்துகொண்டிருந்த ஜீப்பும் வானும் ஒன்றும் பயங்கரமாக மோதியதில் ஒருவர் மரணமானார். மூவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பயங்கர விபத்து நேற்றுமுன்தினம் காக்கைதீவு என்னும் இடத்தில் நடைபெற்றது.

ஆனைக்கோட்டைப் பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டனர்.

சம்பவதினம் பண்டத்தரிப்பிலிருந்து காக்கைதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வானுடன் எதிராக வந்துகொண்டிருந்த ஜீப் பயங்கரமாக மோதியது. இவ்விபத்தில் வான் சாரதியான கல

6-ம் பக்கம் பார்க்க

மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்

உத்தரவாதத் திட்டங்கள்

எங்களிடம் வாருங்கள், அரசாங்க அதிகாரிகளுக்கும், அபிவிருத்திநிதியுதவி நிறுவனங்களுக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் சமர்ப்பிக்கத்துணை நின்று குறைந்த வட்டியில் அவர்களிடம் கடன் பெறக்கூடியதாக உங்கள் விண்ணப்பங்களையும், செயல்முறைத்திட்ட அறிக்கைகளையும் எங்கள் ஆலோசகர்கள் தயாரித்துத் தருவார்கள். உங்கள் சார்பாகவங்கிகளுடனும்மறுநிதியுதவி நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு ஆகவேண்டிய சிபார்சுகளைச் செய்வார்கள். பொருத்தமான சந்தர்ப்பங்களில் இக்கொம்பனி உங்களுக்கு பிணை நின்று குறைந்தவட்டியில் கடன்பெற உதவிசெய்யும்.

செ. லோகநாதன்
இயக்குநர்சபைத் தலைவர்
மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்.

மன்னார்சுங்க அதிகாரிகளிடம் கடத்தல் பொருட்கள்

வானில் சென்ற 6 உத்தியோகத்தர்களை சி. ஐ. டி. பொலிசார் மடக்கினர்

(மன்னார்)

தலைமன்னார் சுங்கப்பகுதியில் பணி புரியும் 6 சுங்க அதிகாரிகளிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களையும் 25 ஆயிரத்துக்கும் அதிகமான ரொக்கப் பணத்தையும் சி ஐ டி பொலிசாரும் லஞ்ச ஊழல் அதிகாரிகளும் கைப்பற்றினர்.

தலைமன்னார் பியரிலிருந்து அரை மைல் தொலைவில் வான் ஒன்றில் சென்றுகொண்டிருக்கையிலேயே சுங்க அதிகாரிகள் அறுவரும் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டனர்.

இன்ஸ்பெக்டர் திரு. தங்கவேலு தலைமையில் சென்ற இரகசிய பொலிஸ் கோஷ்டியினர் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு நவலிங்கம் தலைமையிலான கோஷ்டியின் உதவியுடன் சுங்க அதிகாரிகளை மடக்கிப் பிடித்தனர்.

பொலிஸ் வலையில் அகப்பட்ட சுங்க அதிகாரிகளிடம் இந்திய ரூபா நோட்டுக்களும் இருந்தனவாம். (இ)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

12-9-79 பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமான் கோவில் தேர்த்திருவிழா அன்று மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் எமது தயாரிப்புகள் யாவும் சகாய விற்பனையுடன், அன்பளிப்புகளும் கொடுக்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற்- யாழ்ப்பாணம். 3535

தேவை

இயந்திரத்தில் அலுமினிய பாத்திரங்கள் உருவாக்கும் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை கவர்ச்சியான சம்பளம். பயிற்சியை விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். நசீர் 13 ஐதுறூஸ்மாவா றோட், சோனகதெரு, யாழ்ப்பாணம் 3548

கண்ணாடித் தொழிற்சாலைக்கு மழுப்புபவர்கள் (Fushers) உதவியாளர்கள் உடன் தேவை நேரில் வரவும் தகுதிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, விரான்வீதி, யாழ்ப்பாணம் 3555

யாழ்ப்பாணத்தின் எப்பகுதியிலும் சரி, அல்லது யாழ்ப்பாண எல்லைக்கு வெளியிலும் சரி நல்ல வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. முற்பணமும் கொடுக்கலாம். விலாசம்: சி. இராசேந்திரம், விமலவாசம், ஆனைக்கோட்டை 3549

தேவை

வீடு, மற்றும் கட்டிடவேலை வரைபடங்கள் மதிப்பீடு (Bill of Quanties) ஆலோசனை யாவும் செய்து கொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும். 131, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 3553

நன்றிநவிலல்

அண்மையில் அமரரான தொல்புரத்தைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி பரமலிங்கம் (இளைப்பாறிய புகையிரத அதிபர்) அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகள், மலர்வளையம் சாற்றி சிறப்பித்தவர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் எம் உளமார்ந்த நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவிக்கின்றோம். திருமதி வ.பரமலிங்கம், திரு. ப வரதராசா, திரு. திருமதி ப. இரத்தினராசா, திரு திருமதி ப சரசானந்தராசா, திரு. திருமதி ப. சண்முகராசா. ''இராசவாசா'' தொல்புரம். 3558

நன்றிநவிலல்

எமது தந்தையார் சிவபதம் அடைந்த ஞான்றும் தசசக்கிரியைகளின் போதும் நேரில் சமுகமளித்தும், தந்தி, தபால்கள் அனுப்பியும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்கள் அன்புள்ள சு. திருமலைசாமி சர்மா, சு. சண்முகரத்தின சர்மா, சு. ஸ்ரீதர சர்மா. 3557

பூசகர் தேவை

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயத்திற்கு குடும்பஸ்தரான பூசகர் ஒருவர் தேவை. 45 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. வீட்டுவசதிகள் உண்டு ஏனைய விபரங்களை நேரிலோ கடிதமூலமோ அறிந்து கொள்ளலாம்.

வீ. பொன்னம்பலம்
ஆலய பரிபாலனசபை,
குப்பிளான்,
ஏழாலை.
35 6

பேக்கரிக்கான கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தின் கீழ் இயங்கும், 1ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையில் அமைந்திருக்கும் பேக்கரி நிலையத்தை தரகு அடிப்படையில் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

குறிப்பு:

(1) உற்பத்திசெய்வதற்கு வேண்டிய தளபாட உபகரணங்களும் உண்டு தற்போது பாவித்த வண்ணமே இருக்கின்றது (இரண்டு போறணைகள் உண்டு.)

(2) பிணைப்பணமாக ரூபா2500/-செலுத்த வேண்டும்.

உங்கள் தரகுக்கூலியைக் குறிப்பிட்டு, உங்கள் கேள்விப் பத்திரத்தை பதிவுத் தபால் மூலம் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு 21-9-79ம்திகதிகாலை 9-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் ''பேக்கரிக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் அவசியம்.

பொதுமுகாமையாளர்,
பரு. ப நோ. கூ. சங்கம்
பருத்தித்துறை
08-9-79. 35 2

வசந்தா வஸ்திராலயம்

இலக்கம் 20, (மேல்மாடி) மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

0 பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான சீருடை (Uniforms) ரையிஸ் (Ties) தையல்செய்ய,

0 குழந்தைகள், பிள்ளைகளின் சட்டைகள், பெண்களின் ஆடைகள் நவீனமுறையில் தையல் செய்ய,

0 கோயில்களுக்குத் தேவையான திரைச்சீலைகள் வரைதல், பிறின்ரிங்செய்ய,

0 துணிவகைகள் சாயமிட, பிறின்ரிங்செய்ய,

**நீண்டகால அனுபவமும் திறமையுமிக்க
சிறந்த ஸ்தாபனம்-
விஜயம் செய்யுங்கள்!**

அமரர் எட்வின் பிளாக்

குறுகியகாலச் சுகயீனத்தினால் ஏற்பட்ட மரணம் திரு எட்வின் பிளாக்கை எம்மிடமிருந்து எடுத்துக்கொண்டது. இவர் யாழ்ப்பாணத்திலுள்ள சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்வி கற்றுத் தமது 18வது வயதில் இங்கிலாந்து சென்று அங்குள்ள 'கிங்ஸ்' கல்லூரியிலும், 'இம்பீரியல்' கல்லூரியிலும் கல்வித் தகைமையைப் பெற்றபிற்பாடு லண்டன் பல்கலைக்கழகத்தில் பொதுத்துறைப் பொறியியலாளராகப் பட்டம் பெற்றார். லண்டனிலுள்ள பொறியியலாளர் ஸ்தாபனத்தில் நிரம்பிய தேர்ச்சித்தகைமை பெற்று நீண்டகாலம் இங்கிலாந்தில் கடமையாற்றி, பின்பு 1934ம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பினர். இலங்கைப் புகையிரதப் பகுதியில் கடமையாற்றியபிரித்தானியர்களுக்குப் பிற்பாடு கடமையாற்றிய முதல் மூன்றுபொறியியலாளர்களாக விளங்கிய இலங்கையர்களுள் இவரும் இலங்கைப் புகையிரதப்பகுதியினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு எட்வின் பிளாக் உதவிப் பொறியியலாளராகச் சேர்ந்து பலபதவி உயர்வுகளைப் பெற்றும் பல இடங்களிலும் கடமையாற்றினர். இவர் 1955ம் ஆண்டு பிரதமபொறியியலாளராகவும், போக்குவரத்து இணைப்பு மந்திரியின் செயலாளரின் சிரேஷ்ட உதவியாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் இலங்கைப் புகையிரதப்பகுதியின் பொதுமுகாமையாளராகவும் கடமையாற்றி 1958ம் ஆண்டு சூழ்நிலைக்குச் சாதகமாக இல்லாததினால் உரிய காலத்திற்கு முன்பதாக ஓய்வுபெற்றார். பொறியியலாளரான இவரது தந்தையாரைப்போல இவரும் பாலங்கள் கட்டும் துறையில் தனிப்பட்ட அறிவை கொண்டிருந்தார்.

1951ஆம் ஆண்டு பட்டிப்பொல சுரங்கப்பாதையைத் திருத்தியமைக்கும் [illegible] நெருங்கியது. அவ்வேலையில் திரு. எட்வின் பிளாக்கின் அனுபவமும் விவேகமுமுடைய அறிவு ஆலோசனையே அச்சுரங்கப்பாதையைத் திருத்தியமைப்பதற்குக் காரணமாயிருந்தது. இவர் ஓய்வு பெற்றபின் 1963ம் ஆண்டு வரையும் ஐக்கிய நாடுகள் சபையில் சேர்ந்து பங்கொக்கிலுள்ள ஆசியாவிற்கும் தூரகிழக்கு நாடுகளுக்குமாகிய பொருளியல் ஆணைக்குழுவினுடைய போக்குவரத்துப் பகுதியில் தலைவராகக்கடமையாற்றினர். இவர் இலங்கைக்குத்திரும்பியபோது இலங்கை பியூரோ ஸ்டாண்டட்டில் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டார். ஸ்டாண்டட்

[5-ம் பக்கம் பார்க்க]

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
புங்குடுதீவு

வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 10,000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திரமூலம் விற்பனை செய்ய இருக்கின்றது. விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 50ம், வைப்புப்பணமாக ரூபா 250ம் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்று 17-9-79ம் திகதி அன்று அல்லது அதற்குமுன்னதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்வலப்பின் இடதுபக்க மேல்மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் அவசியம்.

பொதுமுகாமையாளர்.
9-9-79. 3551

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை ஒட்டி யாழ். றோட்டறிக் கழகம் அளிக்கும்

சுகாதாரக் கல்வி - பாடசாலைகளுக்கான

பரிசுப்போட்டி

பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளின்கீழ் கோடிடவும்!

[1] உலகத்தில் அண்மையில் முற்றாக அகற்றப்பட்ட தொற்றுநோய் எது?
அம்மை-கொப்பளிப்பான் - சின்னமுத்து - மலேரியா.

[2] முக்கூட்டுத் தடுப்பு ஊசிமூலம் குழந்தைகளுக்கு வராது தடுக்கக்கூடிய நோய்கள் எவை?
தொண்டைக்கரப்பன்-இளம்பிள்ளைவாதம்-காசநோய் ஏற்பு - எலும்புருக்கி

[3] முதல் ஆறுமாதங்களுக்குச் சிசுக்களுக்கு ஏற்ற சிறந்த பால் எது?
பசும்பால் - தாய்ப்பால் - சோயா அவரைப்பால்.

[4] மிருகங்களில் இருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்கள் எவை?
அம்மை - நெருப்புக் காய்ச்சல் - கொள்ளைநோய்

[5] நுளம்பினால் தொற்றப்படும் நோய்கள் எவை?
டெங்குக்காய்ச்சல் - ஏற்பு - காசநோய் - யானைக்கால்நோய் -மலேரியா.

[6] சந்ததி வழியாகவரும் நோய்கள் எவ்வாறு பெற்றோரிடமிருந்து குழந்தைகளை அடைகிறது?
பெற்றோரிடமிருந்து தொற்றுதல்மூலம் - சந்ததிச் சுவடுகள் மூலம்.

[7] இலங்கையரின் உணவுவகைகளில் எந்தச்சத்துக் குறைவாகக் காணப்படுகிறது?
கொழுப்புச் சத்து— மாச்சத்து புரதச்சத்து.

[8] உயிர்ச்சத்து 'ஏ' கூடுதலாக உள்ள பொருளைக் கூறுக?
வல்லாரை - சோயா அவரை -இறைச்சி-பால்.

[9] மிதப்புள்ள பற்களுக்கு 'கிளி'ப்போட்டு அழகு செய்ய உகந்த வயது எது?
11 -. 13 வரை; 14 - 16 வரை; 18 - 20 வரை.

[10] ஆரோக்கியமான பற்களுக்குத் தேவையான வைட்டமின் சத்துக்கள் எவை?
'ஏ'—'பி'—'ஸி'—'டி'—'ஈ'

பகுதி II

பின்வரும் கேள்விகளுக்கு ''ஆம்'' அல்லது ''இல்லை''யென்று விடையளிக்கவும்.

[1] பாலில் உள்ள புரதச்சத்து கசீனாகும் ( )
[2] ஏழைகள் தங்கள் புரதச்சத்தை அரிசியில் இருந்து பெறுகிறார்கள் ( )
[3] இரத்ததானம் செய்வதால் ஒருவரின் உடம்புக்குக் கெடுதல் ஏற்படுமா? ( )
[4] தெருவிபத்தில் காயமுற்ற உடனே ஏற்புவலி தடுப்பூசி போடுவித்தல் வேண்டுமா? ( )
[5] கர்ப்பிணிகள் ஏற்புத் தடுப்பூசி போடுதல் கூடாதா? ( )
(6) குழந்தைகளுக்கு ஏற்படும் சிரங்கை மாற்றாது விட்டால் இருதயம் முதலிய உறுப்புகளைப் பாதிக்குமா? ( )
[7] வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குக் கூடுதலாகத் தண்ணீர்ப் பதார்த்தங்கள் கொடுப்பது தவறு? ( )
[8] 'பயோறியா' என்று கூறப்படும் பல் இழைய நோயை ஆரம்பத்தில் பல் வைத்தியத்தினால் மாற்றமுடியுமா? ( )
[9] பற்சூத்தை ஒரு பல்லினின்றும் மற்றைய பற்களுக்குத் தொற்றும் தன்மையுடையதா? ( )
[10] ஒவ்வொரு சாப்பாட்டிற்கும் பின்பு பற்களைத் துலக்குதலே சிறந்தபற்பாதுகாப்பு ஆகுமா? ( )

பகுதி III

பின்வரும் கேள்விகளுக்குத் தகுந்தவிடை தருக!

[1] குழந்தை பிறந்தவுடன் ஏன் அழுகிறது?
[2] தொற்றுநோய் பரவும் வழிகளை நிரைப்படுத்திக் கூறுக? ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்களைக் கூறுக?
[3] பின்வரும் தொற்று நோய்களுக்கு நீங்கள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு என்ன?
  (i) மலேரியா
  (ii) காசநோய்
  (iii) வயிற்றோட்டம்
[4] பின்வரும் ஆபத்தான கட்டங்களில் நீங்கள் செய்யக்கூடிய முதலுதவி என்ன?
  (i) வலிப்பு நோயால் அவஸ்தைப்படும் ஒருவருக்கு-
  (ii) விடப்பாம்பினால் கடியுண்ட ஒருவருக்கு-
  (iii) நீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு-
[5] வயிற்றில் வாழும் பூச்சிகளில் முக்கியமான மூன்றைக் கூறுக? அவற்றைத் தடுப்பதற்குச் சிறந்த வழிகள் எவை?
[6] உங்கள் வீட்டில் இருக்கும் சிசுக்குழந்தைக்குப் பால் பருக்கும்பொழுது 'புரைக்கடித்து' மூச்சுத் திணறினால் என்ன செய்வீர்கள்?
[7] காதுக்குள் சிறு பூச்சிசென்று இரைச்சல் செய்தால் உடனடியாக நீங்கள் என்ன செய்வீர்கள்?
[8] வெண்மையான - ஆரோக்கியமான பற்களைப் பெறுவதற்கு குழந்தைகள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு எவை?
[9] பிள்ளைகள் தொடர்ந்து விரல் சூப்புவதை சுலபமாகத் தடுப்பதற்கு பல்வைத்தியத்தில் இடம் உண்டா?
[10] உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க மாணவர் கைக்கொள்ளவேண்டியது யாது?

(5ம் பக்கம் பார்க்க)

இன்று நினைவு நாள்

காதலினால் சாதலைவென்ற பாரதி

- பற்றிமாகரன் -

1921-ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் நாள் காலன் ஒரு சோதனை நடாத்தினன். பைந்தமிழ் உலகின் புதுமை இலக்கிய மன்னனும் சுப்பிரமணிய பாரதியின் இன்னுயிரைக் கவர்ந்து சென்றனன். கலங்கியது தமிழுலகு ஆனால் உண்மையில் தோல்வி கண்டவன் காலன்தான் பாரதியின் வெறும் தசை உடம்பைத்தான் அவன் மரணவயமாக்கினன் அவனது கவிதைகளை அவனால் நெருங்கக்கூட முடியவில்லை. ஒரு பாரதியின் தசை உடம்பழிய ஓராயிரம் பாரதிகளைத் தோற்றுவித்தன பாரதியின் கவிதைகள். ஆம்; பாரதியின் கவிதைகள் ஒவ்வொன்றுமே அன்று மட்டுமல்ல இன்றுங்கூட கவிதை விதைகளாகமாறி நல்ல பல கவிஞர்களை ஆக்கி பாரதிக்கென ஒரு பரம்பரையே படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகவரலாற்றிலே மன்னர்கள் தமக்கெனபரம்பரை கண்டதுண்டு ஆனால் முதன் முதல் ஒரு கவிஞனுக்கென்று பரம்பரையை படைத்தது பாரதி கவிதைகள்தான்!

காதல் மன்னன்

பாரதி ஒரு காதல் மன்னன். அவன் பெண்ணிலே உண்மைக் காதல் கொண்டான். மண்ணிலே உண்மைக் காதல் கொண்டான். விண்ணிலே உண்மைக் காதல் கொண்டான். தமிழ்ச் சொல்லிலே உண்மைக்காதல் கொண்டான். இதனால் சாதலை வென்ற கவிஞரேறாகத் திகழ்கின்றான்.

காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைகளுண்டாம்
ஆதலினாற்காதல் செய்வீர் உலகத்தீரே.

எனக்காதல் செய்யும்படி அறைகூவல் விடுகின்றான் பாரதி. படித்துப்பார்க்க நம் இளந்தமிழினத்துக்கு நாசவினைத்தான் செய்யும். ஆனால் பாரதி வெறும் காதலை மட்டும் இங்கு குறிப்பிடவில்லை;

ஆண் கற்புடையான்

பாரதியின் காதல் அழைப்பு, வாழ்க்கைப்பந்தத்தை தரும் மனம் ஒருமித்த தெய்வீகக் காதல் அழைப்பு. பெண்ணின் பல் சுவைக்க காதல் மொழி பேசி கற்புப் பரிசு பெற்று கண்டதார் எனக் கேட்கும் கயமை காதல் அழைப்பல்ல

"சோரரைப் போலாண் மக்கள் புவியின்மீது
சுவைமிக்க பெண்மை நலமுண்ணுகின்றார்
காரணந்தானியாதெனிலோ ஆண்களெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார் கற்பேமேலென்
றீரமின்றி யெப்போது முபதேசங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிடமியம்புவாரே!
ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ!"

என உண்மைக்காதல் கல்வியோடு முடியக்கூடாது என எடுத்துரைக்கும் பாரதி நல்லதோர் உலகைச்சொல்லி வல்லதோர் உண்மை உரைக்கின்றான்.

"நாணற்ற வார்த்தையன்றோ வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந் தானெரிந்திடாதோ?
பேணுமொரு காதலினை வேண்டியன்றோ
பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்றார்?
காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்துக்
கற்புக் கற்பென்றுலகோர் கதைக்கின்றாரே!

எனச் சுவைக்கும் ஆண்கள் இருக்கின்ற காரணத்தால் தான் புனைக்கும் கதைகள் பிறக்கின்றன எனக் கூறும் கவிஞன் காதலரைப் பிரிக்கின்ற கொடுமனத்தோர் குணம் பற்றியும் பாடமறக்கவில்லை.

காதலை அழிக்கும் மூடர்

"நாடகத்திற் காவியத்திற் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டியதைக்கொல்ல வழி செய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொருமையினால் விதிகள் செய்து
முறைதவறியிடரெய்திக் கெடுக்கின்றாரே"

எனும் பாரதி, உண்மைக் காதலை உருக்குலைக்கும் சக்திகளை மூடரெனப் பட்டெனப் பாடுகின்றான். எனவே பாரதி இல்லறம் சிறக்க இருவரும் காதலில் இணைந்திடல் நலமென நன்கு கூறுகிறான்.

மரண வெற்றி

காதல் தூய்மை நிலையில் உருவாகில் அதனால் தனி மனிதன் பயன் பெறுவதுமட்டுமல்லாமல் மானிட சக்தியே வீறு கொண்டெழும்.

"அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்
காதலினாற் சாகாமலிருத்தல் கூடும்
கவலைபோம் அதனாலே
மரணம் பொய்யாம்"

என்ற கவிஞனின் மூன்று வரிகளிலே மாபெரும் தத்துவத்தையே புதைத்துவிட்டான். கவலைதான் மானிடரின் அழிவுக்காரணி. காதல் கவலையைப் போக்கும் அருமருந்து. ஆகவே மரணத்தின் அழிவுக்கருவி என அழகாகப் பாடுகின்றான்.

இளைய சமூகத்திற்கு வேண்டுகோள்

இறுதியாக இவ்வாறு வாழ்வின் உண்மைக்காதலைப்பாடும் ஒரு கவியரசின் வரிகளை நம தமிழ் இளைய சமுதாயம் பாரதியை நினைவு கூரும் இந்நாளிலே அவனுடைய இக்கவிதையின் அவசியத்தைச் சற்றுச் சிந்திப்பார்களாயின் எமது இனத்தின் "பண்பாட்டுப் பிறழ்ச்சிகளையே" தடுத்து நிறுத்தும் சக்தி பெறுவர் என்பது திண்ணம்.

மக்கள் கருத்து

அன்னசத்திரத்தை அழிப்பதா?

யாழ். நகரில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்கதும் கலாச்சாரமுக்கியத்துவம் வாய்ந்ததுமான அன்னசத்திரத்தை அழிக்கும் முயற்சியை உடன் கைவிடுமாறு மிகப்பணிவன்புடன் மாநகரசபையைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர் என்ன நோக்கோடு ஒரு தருமச் சொத்தை மக்களிடம் கையளிக்கிறாரோ அந்த நோக்கத்திற்கு மாறான காரியங்களைச் செய்தல் மனச்சாட்சிக்கு ஒவ்வாத விஷயமாகும். மேற்கூறிய விஷயமாக 10-9-79 "ஈழநாடு" மக்கள் கருத்துப்பகுதியில் கலைஞானி எழுதியிருந்ததைக்கண்டு அதிர்ச்சி அடைந்தேன். இது விஷயமாக அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலையிட்டு இதை உடன் தடை செய்யவேண்டியது அவரது தலையாய கடமையும், தமிழ் பேசும் இனத்திற்குச் செய்யும் ஓர் அளப்பரிய சேவையுமாகும்.

அத்தருமச் சொத்தை அழிக்காது, காப்பதால் கலாச்சாரம் காப்பாற்றப்படுவது மட்டுமன்றி வரலாறும் பழமையும் காக்கப்படுகிறது என்பதை மனதிற் கொள்ளவேண்டும்.

இத்தருமச் சொத்தில் அன்னசத்திரம் நடத்தப்படாவிட்டால் அதை எப்படி, என்ன செய்யலாம் என்பது பற்றி மக்கள் அபிப்பிராயத்தைக் கேளாது மாநகரசபை சர்வாதிகாரமாக அதனை இடித்து அழிக்க முயல்வது பெரும் குறைபாடாகும்.

தயவு செய்து அழிக்கும் வேலையை உடனடியாக நிறுத்தி மக்கள் அபிப்பிராயத்தைக் கேட்பது மாநகரசபையின் தலையாய கடமையாகும்.

க. அரவிந்தன்,
(ராசன்)

செட்டியகுறிச்சி,
பூநகரி.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் நடவடிக்கை

[வேலணை]

வேலணை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவில் இருக்கும் விவசாயிகளுக்கு தேவையான மண்வெட்டி விதைநெல், தென்னம் நாற்று மற்றும் விதை வகைகள், உரவகைகள், கிருமிநாசினிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்க பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு கி இராசலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒத்திவைப்புக்கு ஆட்சேபம்

[நெல்லியடி]

கட்டைவேலி — நெல்லியடி ப நோ கூ சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு எதிராகக் கூட்டுறவு ஆணையாளருக்குப்புகார் செய்யப்பட்டுள்ளது.

பொதுச்சபை உறுப்பினர்கள் சிலர் கைச்சாத்திட்டு இப்புகாரினை அனுப்பி வைத்துள்ளார்கள். இப்புகாரின் பிரதி யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [அ]

சாவகச்சேரித் தொகுதியில்

மேலும் இருபாடசாலைகள் தரம் உயர்த்தப்படும்

[மட்டுவில்]

சாவகச்சேரித்தொகுதி பாடசாலைகள் புனரமைப்பு திட்டத்தின்கீழ் மேலும்இரு பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாகத் தரம்உயர்த்தப்படும் இதனால் சாவகச்சேரித் தொகுதியில் மகாவித்தியாலயங்களின் தொகை ஒன்பதிலிருந்து பதினொன்றாக உயர்ந்துள்ளது.

சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற பாடசாலை புனரமைப்பு கருத்தரங்கில் இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் பாடசாலை அதிபர்கள்கிராமஅபிவிருத்திச் சங்க உறுப்பினர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள 67 பாடசாலைகளில் 9 மகாவித்தியாலயங்கள் இருக்கின்றன. தேவைக்கேற்ப மேலும் இரு பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாக தரம் உயர்த்தப்படுவதோடு, ஆறு பாடசாலைகள் தரம் குறைக்கப்பட்டு ஆரம்பப்பாடசாலைகளாக்கப்படலாம் என்றும், பாடசாலைகள் தேவைக்கேற்ப விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படவேண்டிய பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களை அமைப்பதென்றும், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவேண்டிய பாடசாலைகளுக்கு விஞ்ஞான கூடங்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பருத்தித்துறைக்கு இடமாற்றம்

[நெல்லியடி]

பருத்தித்துறைப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரியாக வல்லிநாயகி சுப்பிரமணியம் களனியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 மாத காலமாகப் பருத்தித்துறை சுகாதாரவைத்திய அதிகாரி பதவி காலியாகவே இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. [அ]

இயக்குநர்சபை உறுப்பினர்

[வேலணை]

வேலணை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவுக்கு கமநலச் சேவை இயக்குநர் சபை உறுப்பினராக திரு. சு. சிவரத்தினம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். [கு]

நாடும் நடப்பும்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், சகல பத்திரிகை ஆசிரியர்களுக்கும்! என்று உலக அரசாங்க இயக்கத்தின் [illegible] தலைவர் பண்டுவ ஸ்ரீகுணவர்த்தனா அபிவிருத்தி சபைகள் மீதான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள மகஜரின் பிரதியை அனுப்பிவைத்துள்ளார். அதை இங்கு தருகிறேன்.

எமது மக்களுக்கு விரைவான பொருளாதார மேம்பாட்டையும், இன்பவாழ்வையும், சுபீட்சத்தையும் கொண்டுவரும் பொருட்டு, தற்போதைய உள்ளூராட்சி அமைப்புக்கு எங்ஙனம் மாற்றங்கள் நிகழ்த்தி மீளமைக்கலாம் என்பது குறித்து பின்வரும் உத்தேசங்களை இத்தால் யான் முன் வைக்க அவாவுறுகின்றேன்.

மாவட்ட சபைகளுக்கு மாவட்ட பாராளுமன்றங்கள் எனப் பெயர் மாற்றப்படல் வேண்டும்.

பருவகால தேர்தல்கள் மூலம் மாவட்ட பாராளுமன்றங்கள் தெரிவு செய்யப்படுதல்வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் ஆட்சி செய்வதற்கான [அ] சட்டவாக்க [ஆ] நிறைவேற்று மற்றும் [இ] நீதிபரிபாலன அதிகாரங்கள் மாவட்டப் பாராளுமன்றங்களுக்கு அளிக்கப்படுதல்வேண்டும்.

ஒரு பிரதம மாவட்ட அமைச்சரின்கீழ் மாவட்ட அமைச்சர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவை அமைக்கப்படல்வேண்டும்.

(அ) பாதுகாப்பு (ஆ) வெளிநாட்டலுவல்கள் மற்றும் (இ) தேசமடங்கலுமான போக்குவரவு புறநீங்கலான ஏனைய விடயங்கள் அனைத்தும் மாவட்ட அமைச்சர்களின் அமைச்சரவையின்கீழ் வரவேண்டும்.

ஃ ஃ ஃ

கவிஞர் காசிஆனந்தனும் மனைவியாரும் நேற்றுமுன்தினம் மாலை வல்லை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமான் கோயிலுக்கு வந்து சுவாமிதரிசனம் செய்தார்கள். தெய்வத்தின் அருளால்தான் எந்தப் பிரச்னைகளுக்கும், சிக்கல்களுக்கும் தீர்வுகிடைக்கமுடியுமென்பதில் கவிஞர் காசி உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்.

பெரியார் வழியில் சமுதாயச் சீர்திருத்தப்புரட்சியில் இளைஞர்கள் ஈடுபடவேண்டியது அவசியமென்பது கவிஞரின் கருத்து. சாதிப்பாகுபாடு, சீதனமுறை ஒழிப்பு, ஆடம்பரமான ஆலயத்திருவிழாச் செலவுகள் சம்பந்தமாக இளைஞர்கள் முன்வந்து சீர்திருத்தப்பணியில் ஈடுபடவேண்டுமென்பது கவிஞர் காசியின் விருப்பம்.

-ஊர்சுற்றி

இன்றைய பலன்

ஆவணிமாதம் 26ம் திகதி
செவ்வாய்க்கிழமை
[11-9-1979]

மேடம்: இடர்கள் பல தாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

இடபம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான தினம். அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக் கொண்டாட்டங்களும் இடம்பெறும். சிலர் புதிய வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதில் கருத்தைச் செலுத்துவர்.

மிதுனம்: உண்மையின்று ஊமையாகிவிடும். உதவி செய்யச்சென்று உபத்திரவத்தை விலைக்கு வாங்கிக் கொள்வீர்கள். சிலர் வாழ்க்கையில் பணமுடை அதிகரிக்கலாம். செலவு வகைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும். பகைத்தவர்களே உங்களைப்பாராட்டச் செய்வார்கள். பணவிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். சிறப்பான தினம்.

சிங்கம்: சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத்தேடித் தரும். கலைத்தொடர்பான காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். ஸ்தலயாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம்.

[5-ம் பக்கம் பார்க்க]

சுதந்திரத் தேர்தலை விட அணு உற்பத்தி மேலானது

மே. ஜெர்மனியில் பாக். அதிபர்

பிராபேர்ட், செப். 10

பாகிஸ்தானில் சுதந்திர பொதுத்தேர்தல் நடைபெறுவதைவிட அணுசக்தி உற்பத்தித்திட்டத்தைமேற் கொள்வதே முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் மேற்கு ஜெர்மனியில் தெரிவித்துள்ளார்.

ஹவானாவில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பிய ஜெனரல் ஹக், பிராங்பேர்ட்டில் தங்கியிருக்கையில் பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போதேமேற் கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தான் அணுசக்தி உற்பத்தியில் ஈடுபடுவது குறித்த செய்திகள் வெளிவந்ததை அடுத்து எமக்கு எதிராக பல விஷமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார். (இ)

மாருதி விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள

இந்திராவை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது

ராஜ்நாராயண் கருத்து

சண்டிகார், செப். 10

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வன் சஞ்சய் காந்தியின் மாருதி கார் உற்பத்திநிறுவன ஊழல்தொடர்பாக விசாரணை செய்த கமிஷன் திருமதிகாந்தி மீதும் குற்றம் சுமத்தியுள்ளது எனவே திருமதி காந்தியை எதிர்வரும் தேர்தலில்போட்டியிட அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு ஜனதா-எஸ் கட்சித்தலைவர் திரு ராஜ் நாராயண் தெரிவித்துள்ளார்

பஞ்சாப் மாநில நகரமான சண்டிகாரில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர்மேலும் கூறியதாவது:

திருமதி காந்தியின்தலைமை குறித்து பிரதம தேர்தல்ஆணையாளருடன் பேச்சு நடத்தஉள்ளேன்

இதே வேளையில் 1975-ம் ஆண்டு அலகாபாத் நீதிமன்றம் திருமதி காந்திமேலும் 6 ஆண்டுகளுக்குத் தேர்தலுக்கு போட்டியிடமுடியாதென்று தீர்ப்பு வழங்கியது தொடர்பாக திருமதி காந்தி தற்போது தமது எதிர்காலம் குறித்து சட்டநிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார் என்றும் திரு நாராயண் கூறினார். (இ)

இந்திராவுக்கு சுவிஸ் வங்கியில்

3½ கோடி டாலர்

கைமாறிய பணமாம்

புதுடில்லி, செப். 10

இந்திய முன்னாள்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பேரிலும் அவரது உறவினரின் பேரிலும் சுவிஸ் வங்கியில் மூன்றரை கோடி டாலர்கள் வைக்கப்பட்டுள்ளது

இதுகுறித்து ஜனதா-எஸ் பொதுக்காரியதரிசி, உதவிப் பிரதமர் திரு வை பி சவானுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் எழுதியுள்ளார்

திருமதி காந்தியின் ஆட்சியின் போது சிலபேரங்களுக்காக கைமாறப்பட்டு சுவிஸ் வங்கியிலிடப்பட்ட இப்பணம் குறித்து அரசு ஆராய்ந்து அறியவேண்டுமென்றும் அவர் தமதுகடிதத்தில்கேட்டுள்ளார் (இ)

77-ம் ஆண்டை விட

ஜனநாயகத்திற்கு இன்று ஆபத்து ஏற்பட்டுள்ளது

ஜெகஜீவன் எச்சரிக்கை

புதுடில்லி, செப். 10

இந்தியாவில் இப்போது ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்று ஜனதாகட்சி தலைவர்களில் ஒருவரான திரு. ஜெகஜீவன் கூறினார்.

புதுடில்லியில் ஹரிஜனர்கள் நடாத்திய கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

77ம் ஆண்டு பொதுத்தேர்தல் காலத்தில் இருந்ததைவிட இன்றே ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும் அவர் கூறினார்.

இந்திய பாராளுமன்றத்தை தமது மனச்சாட்சிப்படியே தாம் கலைத்ததாக ஜனாதிபதி திரு நீலம்சஞ்சீவரெட்டி கூறியது குறித்து கருத்துத்தெரிவிக்கையில் திரு ஜெகஜீவன்ராம் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்தில் மக்களின் விருப்பம் முக்கியமே ஒழிய தனிப்பட்ட ஒருவரின் மனச்சாட்சியல்ல.

தற்போதுவெகுபயங்கரமாக உருவாகிவரும் வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராட மக்கள் முன்வரவேண்டும். (இ)

தண்ணீர்க் கஷ்டம் தீர்வதற்கு பவுசர் தேவை

பண்டிதர் தந்தி

(வேலணை)

குடிதண்ணீர்க் கஷ்டத்தால் பாதிக்கப்பட்டு வரும் ஊர்காவற்றுறை புங்குடுதீவு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு புங்குடுதீவுகிராம சபைக்கும் ஊர்காவற்றுறை பட்டினசபைக்கும் ஒவ்வொரு பவுசர் அனுப்புவதாகத் தெரிவித்திருந்தபோதும் இன்று வரை அவை அனுப்பப்படவில்லை, எனவே உடனே அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி கட்டிட நிர்மாண அமைச்சின் செயலாளர் திரு ஆர் பாஸ்கரலிங்கத்தை அவசரத்தந்திமூலம் ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் கேட்டுள்ளார். (இ)

ஆஸி- இந்திய 1-வது டெஸ்ட் இன்று ஆரம்பம்

சென்னை, செப். 10

இந்திய-ஆஸ்திரேலிய 1 வது கிரிக்கட் டெஸ்ட் செவ்வாய்க்கிழமை தமிழ்நாட்டில் ஆரம்பமாகிறது.

சென்னை சிதம்பரம் விளையாட்டரங்கில் இந்த டெஸ்ட் நடைபெறுகிறது

இந்த ஐந்து டெஸ்ட்தொடரில் இந்திய கோஷ்டிக்கு சுனில் கவாஸ்கரும் ஆஸ்திரேலிய கோஷ்டிக்கு கிம் கியூஜும் தலைமை தாங்குகிறார்கள் (இ)

'ஈழநாடு'

இந்தியத் தேர்தல் (1979) போட்டி

இவ்வருடப் டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற (லோகசபை) இடைத்தேர்தலையொட்டி "ஈழநாடு" பத்திரிகை தனது வாசகர்களுக்கு இத்தேர்தல் போட்டியை நடாத்துகிறது இப்போட்டியில் கலந்துகொள்ள நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் கேட்கப்பட்டுள்ள நான்கு கேள்விகளையும் கவனமாகப் படித்து, உங்களின் ஊகத்தைக்கொண்டு விடைகளைக் கண்டுபிடித்து, "போல்பொயின்ற்" பேனாவால் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். ஒருவர் எத்தனை விடைகளையும் (கூப்பன்களையும்) அனுப்பலாம். கட்டுப்பாடு கிடையாது

ஈழநாடு தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :......................................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ....

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?......................

(4) புதிய பிரதமர் யார்?......................

பெயர்:......................................

விலாசம்: ....

....

....

....

கையொப்பம் திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49,
யாழ்ப்பாணம்.

ரொடீஷியாவில் மரணஓலம் ஓயுமா?

வெள்ளையர் மண்ணில் கறுப்பு இனத்தலைவர்கள்

உலக அரசியலில் புரையோடிப்போன புண்ணாகக் காணப்படும் ரொடீஷியப் பிரச்சினைக்கு மருந்து போடவென பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளும் முயற்சியின் முதல் பலனாக நேற்று லண்டனில் ரொடீஷியத் தலைவர்களின் சர்வகட்சி மாநாடு ஆரம்பமாகியது. பிரிட்டிஷ்பிரதமர் மாகிரட் தட்சர் பொதுநலவமைப்பு மாநாட்டில் அளித்த வாக்குறுதியின் செயற்பாடாகவும் இம்மாநாடு ரொடீஷியாவுக்கென ஒரு புதிய அரசியலமைப்பை அமைக்கவும், சர்வதேச மேற்பார்வையின் கீழ் ரொடீஷியாவில் மீண்டும் பொதுத்தேர்தல் நடத்தவும் வழிகாணவெனக் கூட்டப்படுகிறது.

சிம்பாப்வேரொடீஷியாவின் தலைவரும் தற்போதைய பிரதமருமான முஸரேவாவே இம்மாநாட்டிற்கென முதலில் லண்டன் சென்ற தலைவராவார். இவருடைய மனதில் தன்னுடைய அரசு நியாயபூர்வமானதென நிரூபித்து பிரிட்டிஷ் அரசின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமெனும் ஆசை இன்னமும் ஊசலாடிக்கொண்டிருப்பதை இவருடைய பேச்சுக்களிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது

கெரில்லாத் தலைவர்கள் பிரசன்னம்

ரொடீஷியாவில் சக்தி படைத்த கெரில்லா இயக்கத் தலைவர்களான ஜோசுமூக்காபே, என்கோமா ஆகிய இருவரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் முக்கிய ஆபிரிக்கத் தலைவர்களாவர் இவர்கள் அரசமைப்பு மாற்ற கருத்துப் பரிமாறலுக்குமுன்பு சிம்பாப்வே ரொடீஷியாவின் இன்றைய இராணுவ நிலைப்பாடுகள் பற்றிய பிரச்சினைகளைக் களைய முயற்சிப்பார்களெனத் தெரிகிறது. இன்றைய இராணுவ நிலைப்பாட்டுப் பிரச்சினை எழுப்பப்பட்டால் சர்வகட்சி மாநாடு கூட்டப்படும் நோக்கமே திசைதிருப்பப்பட்டுவிடக்கூடும் என அரசியல் அவதானிகள் பலத்த அச்சமடைந்துள்ளனர்.

இயன்ஸ்மித்தின் முக்கியத்துவம்

இம்மாநாட்டின் மற்றோர் முக்கிய பிரமுகர் வெள்ளையர் ஆட்சிக்காலப் பிரதமர் இயன் ஸ்மித்தாவார் ரொடீஷிய அரசின் 2பேர்கொண்ட மாநாட்டுக்குழுவில் இயன்ஸ்மித்தும் இடம்பெற்றுள்ளார் இயன்ஸ்மித் இருவகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றார்

அறுபத்தெட்டுலட்சம் கறுப்பர்களையும் இரண்டரை லட்சம் வெள்ளையரையுங்கொண்ட ரொடீஷியாவில் சுதந்திரத்தீயை மூண்டெழச்செய்தவர் இவர் இவருடைய ஆட்சிக்காலத்தில் கறுப்பர்களை காதலித்த வெள்ளையர்கூட படுபயங்கர சித்திரவதைகளை எதிர்நோக்கினர்

மனிதாபிமானத்தையே மறந்துவிட்ட இயன்ஸ்மித், கறுப்பர்களின் ஆத்திரத்துக்குரிய தலைவராக இருப்பதால் இவரின் வரவால் கெரில்லாத் தலைவர்கள் பழைய சம்பவங்களை நினைத்து உணர்ச்சிவசப்படக்கூடும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

வெள்ளையரும் வெறுப்பு

1965ம் ஆண்டு பிரிட்டிஷ் மகாராணிக்கு தெரியாதமுறையில் ரொடீஷியாவில் தன்னிச்சையான சுதந்திரப்பிரகடனத்தை விடுத்துச்சட்டவிரோத அரசமைத்ததுடன் நிற்காது, உலகம் முழுவதும் வெள்ளையரைத் தூற்றும்படியாக மனிதப்படுகொலைகளையும் சித்திரவதைகளையும் நடாத்தியவர் இயன்ஸ்மித் எனும் அபிப்பிராயம் வெள்ளையர் மத்தியிலும் வேரூன்றி இன்று அது இயன்ஸ்மித்மேல் வெறுப்பாக மாறியுள்ளது முடிக்கு எதிராக நடந்த தேசவிரோத குற்றம் புரிந்தமைக்கு இயன்ஸ்மித்தும் இவரது உதவிப்பிரதமரும் பிரிட்டிஷ் அரசால் கைதுசெய்யப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்துவந்தது. ஆனால் இம்மாநாட்டுக்காக இவர்கள் வருகையில் கைது செய்யப்படவோ விசாரணைக்குட்படுத்தப்படவோ மாட்

(5-ம் பக்கம் பார்க்க)

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows
Night Of The Big Heat
Color

[illegible] (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்
ஜெயசித்ரா
பயணம்

'சிவக்கலாமணி'

(அளவெட்டி)

அளவையூர் நாகவரத நாராயணன் தேவஸ்தானத்தில் 7ம் திருவிழாவின்போது வில்லிசை நிகழ்த்திய திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகத்துக்கு 'சிவக்கலாமணி' என்னும் பட்டத்தை அருட்கவி சீ. விநாசித்தம்பி வழங்கிக் கௌரவித்தார். அவரது வில்லிசை நிகழ்ச்சி 'ஸ்ரீ ஆண்டாள்' என்ற தலையங்கத்தில் தொடர்ந்து நிகழ்ந்துவருகிறது.

இன்று மட்டும்
சாந்தி —யாழ்நகர்—போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வைஜந்திமால... சுனில்டட்...
"அம்ரபாலி"
ஹிந்தி - ஈஸ்ட்மன் வண்ணச்சித்திரம்
இசை: சங்கர் ஜெய்கிஷான்
பின்னணி: லதாமங்கேஷ்கார்

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30p m only
Special Shows Saturday & Sunday 10-30, a. m
MICHAEL YORK in
M. G. M. Presents
"LOGAN'S RUN"
Color-Thriller

வெலிங்டன் தினசரி 2-30, 6-30 & 9-45
[illegible] சனி, ஞாயிறு 10-30
ரிவோல்வர் ரீட்டா

லிடோ (யாழ். நகர்) போன் [illegible] தினசரி 4 காட்சிகள்
குங்குமம்
(புதிய பிரதி)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-15, 9-45
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ ஆதித்தன்-தங்கவேலு
நடித்த
காதல் படுத்தும்பாடு
[புத்தம் புதிய பிரதி]
ரி. ஆர். பாப்பாவின் இசை
உங்களை மகிழ்விக்கும் காதுக்கினிய கீதங்கள் - மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் - வயிறுகுலுங்க சிரிக்க வைக்கும் நகைச்சுவை யாவும் நிறைந்த படம்.

ராஜா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா
நடித்த
அன்புக் கரங்கள் (புதிய பிரதி)
13-9-79 முதல் ஜெமினி—சாவித்திரி
காத்திருந்தகண்கள்

ராணி (யாழ். நகர்) கடைசிவாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
[புதிய பிரதி]
கதை, வசனம், டைரக்‌ஷன்: ஸ்ரீதர்
இதுவே கடைசி சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 9-45
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(புதிய பிரதி)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி.ப. 2-30,
மாலை 6-30, இரவு 9-30
(சென்னிற்றிய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்‌ஷன்: [illegible]

"மனிதனை மனிதன் அடக்குவதை தெய்வம் மன்னிக்காது"

[புங்குடுதீவு]

"தெய்வீகம் போதிப்பது நேர்மையும் நியாயமும் நிறைந்த வாழ்க்கையையும் ஏழைகளை நேசித்து உதவும் பண்பையுமே என்பதை மனித சமுதாயம் நினைவிற்கொள்ள வேண்டும். அநியாயங்களை, அக்கிரமங்களை ஆதரித்துக் கொண்டு இறைவனை இறைஞ்சுவதால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. ஒரு சாராரை மறுசாரார் அடக்கும் செயலுக்குத் துணைபோவதை தெய்வம் ஒருபோதும் மன்னிக்காது. ஆலயங்களுக்குச் செல்லும்போது முதலில் நமது ஆணவத்துக்கும் அகங்காரத்துக்கும் ஓய்வுகொடுக்க வேண்டும். உலகமக்களுக்குச் சேவை செய்வதற்கும் தனது இனத்துக்குரியபணியை ஆற்றுவதற்கும் அனைவருக்கும் நியாயமாக நடந்துகொள்வதற்கும் உரிய மனவலிமையைத் தாவென்று இறைவனை வணங்குபவனே தெய்வத்தை அணுகுவதற்குத் தகுதியானவன். சுயநலநோக்கில் ஆண்டவனை இறைஞ்சுவதில் பலனில்லை. ஆண்டவன் பள்ளிகொள்ளும் ஆலயங்களை அமைக்கும்பேறு எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதல்ல, இந்தப்பெறற்கரிய பேற்றைப்பெறுபவர்கள் பாக்கியசாலிகள்"

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலய கும்பாபிஷேகத் திருப்பணி ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. மகேந்திரன் மேலும் பேசியதாவது: அந்நியர் ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்பட்டபோது சுதேசிய மதங்களைக் காக்க நாவலர் பெருமான் போன்றவர்கள் போராடினார்கள். அதேபாதையில் சமயப் பணியாற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும். உழைக்கும் பணத்தில் ஒருபகுதியை சமயப் பணிக்கும் சமூகப் பணிக்கும் உதவ தனவந்தர்கள் பின்நிற்கக்கூடாது. மக்களாட்சி மலரும் இன்றைய காலகட்டத்தில் மக்களே சகலதையும் செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். ஆலயங்களைக் கட்டிவிட்டால்போதாது ஆலயம் போதிக்கும் நெறியில் நின்று வாழ்க்கையை நடத்துவதோடு ஆலயங்களை நல்ல முறையில் பேணவும் அடியவர்கள் முன்னிற்கவேண்டும். சமய குரவர்கள் சமயப்பணி மாத்திரம் செய்யவில்லை துன்பப்பட்டோரின் துயர்துடைக்க முன்னின்றதன் மூலம் சமூகப் பணியும் செய்தார்கள். அந்த முன்மாதிரியை நமது மக்களும் கைக்கொள்ளவேண்டும்."

இவ்வைபவத்தை கோப்பாய் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்களே முன்னின்று நடத்தினார். திரு. த. சு. இரா

[6-ம் பக்கம் பார்க்க]

இன்றைய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்னி: தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும், எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம், ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

துலாம்: குடும்பவாழ்க்கை இன்று சுமாராக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். டாக்டர்களுக்கு சிறப்பான தினம்.

விருட்சிகம்: நாள் எல்லாம் அலைச்சல். உடல் நலிவு தோன்றும், பிணிக்கு இடம்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

தனு: இலட்சியப் பாதையில் வெற்றிநடை போடுவீர்கள், உயர்வட்டத்து அன்பும் ஆதரவும் கிடைக்கும், பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

மகரம்: தங்கக்குணம் மேலிடும், தக்க மதிப்பும் கிடைக்கும், இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும், உழைப்பிற்கு பலனும் உற்சாகமும் பிறக்கும், முன்னேற்றமான தினம்.

கும்பம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும், விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

மீனம்: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும், சிலர் கடன் தொல்லையால் பாதிக்கப்படுவார்கள், ஆடம்பரச்செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், கூட்டு வியாபாரத்தில் இக்கட்டுகள் தோன்றலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வெல்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சாவித்திரி
கற்புக்கரசி

ரொடீஷியாவில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என இன்றைய பிரிட்டிஷ் அரசு வாக்குறுதி அளித்ததன்பேரிலேயே இவர்கள் லண்டன் வந்துள்ளனர். ஆனால் லண்டனிலுள்ள இனஒதுக்கலை எதிர்த்துப் போராடும் குழுக்கள் [illegible] செய்யப்போவதாகப் பயமுறுத்தியுள்ளனர். இதையடுத்து பலத்த பாதுகாப்பை பிரிட்டிஷ் அரசு இவருக்கு வழங்கியுள்ளது.

எதிர்பார்த்த புலனை அடையுமா?

இவ்வாறாக பலதரப்பட்ட அபிப்பிராயங்களை உடைய ரொடீஷியத் தலைவர்கள் வெள்ளையர் மண்ணிலே தமது இனத்தினதும் நாட்டினதும் எதிர்காலம்பற்றி நிச்சயப்படுத்தவென கூடியுள்ள போதிலும் இம்மாநாடு எதிர்பார்க்கின்ற அளவுக்கு வெற்றியளிக்காது என்றே நடுநிலை அவதானிகள் கருதுகின்றனர். கெரில்லாத் தலைவர்களின் பிடிவாதப் போக்கால் மாநாடு குறித்த இலக்கை அடைய முடியாத நிலையை எய்துமென்னும் ஏக்கம் பலரிடையிலும் பலமாக ஏற்பட்டுள்ளது.

எது எப்படியிருப்பினும் ரொடீஷியாவில் ரத்தப்பெருக்கும் மரண ஓலமும் ஓயவேண்டும் என்பதே உலகின் பிரார்த்தனை.

- அவதானி

வண்ணையில்

கிருஷ்ண ஜயந்தி விழா

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் விசேஷ உற்சவங்கள் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலில் நடைபெறவுள்ளன.

நாளை ஜயந்திவிழா

நாளை புதன்கிழமை ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். ஸ்ரீ வேணுகோபாலசுவாமிக்கு அஷ்டோத்திரசத சங்காபிஷேகம், தீபாராதனை, சகஸ்ரநாம அர்ச்சனைகள் நடைபெறும். இவ்விழாவில் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் தலைமையில் திருமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்புரையும் திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் பஜனையும் நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கமும் இடம் பெறும்.

உறியடி உற்சவம்

மறுநாள் வியாழன் மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் உறியடி உற்சவமும் இடம் பெறும். [கா-வ]

அமரர்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பியூரோவை ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டியநிலை இவருக்கு ஏற்பட்டது. இந்த ஸ்தாபனத்திலிருந்து 1968ம் ஆண்டு ஓய்வு பெற்றபின் குறுகியகால சேவைகளில் பங்குபற்றி நாட்டுக்குத் தொடர்ந்து தமது சேவையை ஆற்றியுள்ளார்.

இவரது பிறப்பிடமாகிய சங்கானை அனுதாபமும் பெருந்தன்மையுமுள்ள நண்பர் ஒருவரை இழந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தென்னிந்திய திருச்சபை கீழ்ப்படிதலும் விசுவாசமுமுடைய மகனொருவரை இழந்துள்ளது. இவரது குடும்பம் அன்புக்குரியவரை இழந்தது. இவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.

-ஜே. எவ். எஸ்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விடைகளைத் தெளிவாக எழுதி உங்கள் பாடசாலைப் பெயருடனும், வகுப்பாசிரியரின் கையெழுத்துடனும், 'ஈழநாடு' கேள்விக் கூப்பனுடன் சேர்த்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். பரிசுகள் பற்றிய அறிவிப்புகள் பின்னர் தரப்படும்.

ரோட்டேறியன் டாக்டர் பா. சே. பாரதி, பல் வைத்தியசாலை, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி முடிவு திகதி: 6-10-79

யாழ். ரோட்டரிக் கழக மாணவர் சுகாதாரப் போட்டிக் கூப்பன்

மாணவனின் முழுப்பெயர்………………

விலாசம்………………

பாடசாலைப் பெயர்………………………

வகுப்பாசிரியரின் கையொப்பம்…………………

………………………………

மாணவனின் கையொப்பம்

நெடுந்தீவு கொலைவழக்கு

'இறந்தவர் உடலில் 26 வெளிக்காயங்கள் இருந்தன'

8 விலா எலும்புகள் முறிந்திருந்தன

-டாக்டர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"இறந்தவரின் உடலில் 26 வெளிக்காயங்கள் காணப்பட்டன 8 விலா எலும்புகள் முறிந்திருந்தன'' என்று நெடுந்தீவு கொலைவழக்கில் சாட்சியமளித்த டாக்டர் செல்வி வெனி துரைராசா கூறினார்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் ஜூரை ஏம் ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் நெடுந்தீவில் 77 மார்ச் 9ம் தேதி சட்டவிரோதமான கூட்டத்தில் இருந்ததாகவும் மரியசின் ஞானப்பிரகாசத்தைக் கொலை செய்ததாகவும், வி செபரத்தினம், அ அலஸ்டீன், தொ, மைக்கேல், ம அருள்தாஸ், ம, பிரான்சிஸ் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ் சரவணமுத்து, சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் (ஜூனியர்) ஆகியோர் சட்டத்தரணி ப. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி நாகராசாவும் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ் சிறிகாந்தாவும் ஆஜரானார்கள். 4ம், 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி ப. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார் அரசதரப்பில் சட்டத்தரணி ஜி ஜெயக்குமார் ஆஜரானார்

விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்திற்குள் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

டாக்டர் செல்வி வெனி துரைராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

இறந்தவரின் வயிற்றில் மதுபானம் எதுவும் இருக்கவில்லை மழுங்கிய ஆயுதத்தினால் ஏற்பட்ட காயத்தின் நிமித்தம் இரத்தப் பெருக்கினாலும் அதிர்ச்சியினாலும் இரத்தாசயம் நின்றதனால் மரணம் சம்பவித்ததாக அபிப்பிராயப் படுகிறேன்

"காயங்கள் இங்கு காட்டப்பட்ட கற்களினால் அல்லது வேறு கற்களினால் ஏற்பட்டிருக்கமுடியும். வெளிக்காயங்கள் அநேகமாக இறந்தவரின் இடுப்புக்கு மேல்தான் காணப்பட்டன 1, 2, 8, 7ம் காயங்கள் இக் கற்களினாலும் இதே போன்ற வேறு கற்களினாலும் ஏற்பட்டிருக்கவும் கூடும் 14வது காயம் மொட்டை ஆயுதத்தினால் ஏற்பட்டிருக்கும். காயங்கள் கற்களை எறிந்ததால் ஏற்பட்டிருக்கலாம். எவ்வளவு தூரத்தில் இருந்து எறியப்பட்டதென என்னால் கூறமுடியாது.

1ம், 4ம், 5ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் (ஜூனியர் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: இறந்தவருக்கு 8 விலா எலும்புகள் முறிந்திருந்தன?- ஆம்.

சட்: எப்படி உடைந்தது? 7 விலா எலும்புகள் எப்படி முறிந்தனவென்று சொல்லமுடியாமலிருக்கிறது.

சட்: இறப்பதற்கு முன் கடைசியாக எப்போது சாப்பிட்டிருக்கலாம்? 6 மணிமுதல் 12 மணித்தியாலத்திற்குமுன்.

சட்: 6 மணித்தியாலம் முன் எதுவும் சாப்பிட்டிருக்கவில்லை? சாப்பாடு எதுவும் சாப்பிட்டிருக்கவில்லை, தண்ணீர் பதார்த்தம் அருந்தியிருக்கலாம்.

சட்: 1ம் எதிரியைப் பரிசோதனை செய்தீர்? ஆம்.

சட்: காயம் பாரதூரமானதால் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பினீர்? நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்ய இயலாதென்பதால் அனுப்பினேன்.

சட்: என்ன காயமிருந்தது? -வெட்டுக்காயம். வேறு காயம் பற்றி சரிவரச் சொல்லமுடியாது.

3ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ. நாகராசா குறுக்குவிசாரணை செய்தார்.

சட். கற்கள் அழுத்தமானதல்ல? ஆம்.

கரடுமுரடானகற்கள்? ஆம்.

சட்: அப்படியான கற்களால் எறியும்போது உரஞ்சல்காயம் ஏற்படும்?- கட்டாயம் ஏற்படவேண்டும் என்று இல்லை.

சட்: நம்பமுடியாமலிருக்கிறது. துவக்கால் சுட்டால், கெற்றப்போலால் அடித்தால் நேராகப் பிடிக்கும். கற்களால் எறியும்போது சுற்றாகச் செல்லும், அப்போது உரசல்காயம் ஏற்படுமல்லவா? கட்டாயம் ஏற்படவேண்டுமென்றில்லை.

சட்: காயங்கள் கற்களால், அல்லது பொல்லால் ஏற்பட்டதென்று சொல்லமுடியாது? மொட்டை ஆயுதத்தினால் ஏற்பட்டது.

சட்: பொல்லால் ஏற்பட்டிருக்கலாம்?- ஆம்.

சட்: பொல்லால் அடித்தால் விலாஎலும்பு முறியுமா?- முறியலாம். கட்டாயம் முறியவேண்டுமென்பதல்ல,

சட்: 2ம் எதிரியைப் பரிசோதனைசெய்து யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினீர் ஆம்.

விசாரணை இன்று காலை 9 மணிக்கு தொடர்ந்து நடைபெறும். பிற்பகலும் விசாரணை நடைபெறும். (க)

அந்தியேட்டியும், வீட்டுக் கிரியையும

திருமதி. வெற்றிவேலு சின்னம்மா

தோற்றம்: 1895-01-16 உசன்

மறைவு: 1979-08-14 நாவற்குழி

அன்புக்கும், சொந்தப் பண்புத் தொடர்பை நீட்டி, அன்னாருடைய 1979-09-11-ம் திகதி (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் 1979-09-13-ம் திகதி வியாழக்கிழமை பகல் 11-00 மணியளவில் நாவற்குழி கேரதீவு ரோட் 35-ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் நீங்கள் உங்கள் சுற்றத்தாருடன் தயவுசெய்து தவறாது சமூகம் தருமபடி மிகவும் பணிவன்புடன் வேண்டி நிற்கிறோம்.

கலாநிதி வெ. திருஞானசம்பந்தர்
கனிஷ்ட புதல்வர்.

திருஞானம்ஸ் & கோ.,
ஓடிற்றேஸ்
141. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

3559

அமைச்சர் தொண்டமான் இன்று கிளிநொச்சி விஜயம்

[யாழ்ப்பாணம்]

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு சௌ தொண்டமான் இன்று கிளிநொச்சிக்கு உத்தியோகப் பற்றற்ற விஜயம் ஒன்றை மேற்கொண்டு விசேஷ புகையிரதமூலம் வருகிறார்.

இன்று காலை 6-30 மணிக்கு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை வந்தடையும் அமைச்சர் தொண்டமானை யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமி வரவேற்பார்.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், மிருக ஆராய்ச்சி நிலையம், தனியார் பண்ணைகள் என்பவற்றைப் பார்வையிட்ட பின்னர் தர்மபுரத்திற்குச் சென்று கஸ்தூரிபாய் இல்லத்தில் நடைபெறும் விழா ஒன்றில் கலந்து கொள்வார். பின்னர் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் விசேஷ பூஜையிலும் கலந்துகொள்வார்.

பிற்பகல் 5 மணிக்கு உருத்திரபுரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் அவர் இன்று இரவு 8-30 மணிக்கே கொழும்பு திரும்புவார். (கு)

கங்காசத்திரம் இடிக்கும் வேலைகள் இடைநிறுத்தம்!

தொல்பொருள் இலாகா நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ் நவீன மார்க்கட்டிடத்தச் சமீபத்திலுள்ள கங்கா சத்திரத்தை இடிக்கும் வேலையை உடனடியாகத் தற்காலிகமாக நிறுத்துமாறு தொல்பொருள் இலாகா யாழ் மாநகரசபைக்கு நேற்று அறிவித்துள்ளது

கங்கா சத்திரத்தை மாநகரசபை பொறுப்பேற்று அதில் நவீனமார்க்கட் கட்டுவதற்காக ஏற்பாடு செய்தது சத்திரத்திலுள்ள தேநீர்க்கடை, தேங்காய் கடைக்காரர்களை வெளியேற்றி ஓடுகளை அகற்றி அதனை இடிக்கு வேலைகள் நடந்துகொண்டிருந்தது.

ஆணையாளர் இமைகாவிடமிருந்து வந்த உத்தரவைத் தொடர்ந்து யாழ் பிரதேச அதிபர் திரு செல்வரத்தினம் கங்கா சத்திரத்தை நேரில் பார்வையிட்ட பின் இடிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சே சிவஞானத்திற்கு அறிவித்துள்ளார்

"அமைதிக்காக செபியுங்கள்''

[யாழ்ப்பாணம்]

"உலக அமைதிக்கு செபமாலையை அடிக்கடி செபிப்பது அவசியமாகின்றது. இதனையே அன்னை மரியாளும் ஆசிக்கிறாள்''

இவ்வாறு பண்டத்தெருப்பு பாத்திமா பதியில் ஒரு கோடி செபமாலை செபிக்கும் வைபவம் தொடர்பாக நடைபெற்ற ஆராதனையில் பேசிய அருட்திரு இ. அன்ரன் அடிகள் கூறினார் அவர் தொடர்ந்து பேசுகையில், புனித மரியாளின் பிறந்தநாளான இன்று உலக அமைதிக்காகவும் ஏழைகள் துயருற்றோர் ஆறுதல் பெறவும் ஆரம்பிக்கும் இச் செபமாலைப் பக்தி முயற்சி நன்கு வளர்ந்திட அடிக்கடி அனைவரும் செபமாலை செய்திட வேண்டும்'' என்றார்.

ஆரம்பத்தில் விளான் ஆலயத்திலும் பண்டத்தரிப்பு வியாகுல பதியிலும் இருந்து செபமாலை செபித்தபடி பக்தர்கள் ஊர்வலமாக பாத்திமா அன்னையின் திருப்பதி நோக்கி வந்தனர். (இ-கு)

மனிதனை...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சனிகள் தம்பதிகள் திரு: பொ. தருமரத்தினம் தம்பதிகள், திரு இ பொன்னுத்துரை தம்பதிகள் முறையே பிள்ளையார், முருகன், கண்டேசுவரர் ஆலயங்களைத் தமது செலவில் அமைக்கமுன்வந்து இவ்வைபவத்தில் அத்திபாரக் கற்களை நாட்டிவைத்தனர் (க)

ஜீப்-வான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலைச் சேர்ந்தவரும் பண்டத்தரிப்பில் வசிப்பவருமான [illegible] முதியான்சே டிக்கிரி பண்டார மர[illegible] வானில் பயணம்செய்த கணபதி செல்வராசா (வயது 23) சின்னத்தம்பி ராஜதுரை (வயது 24) ஆகியோர் ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் டீ லந்துரை, கான்ஸ்டபிள் கே எம் ஏ ஜபார் ஆகியோர் இளவாலையைச் சேர்ந்த ஜீப் சாரதி சூசைப்பிள்ளை செல்வத்தைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மரணமானவரின்உடல் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (சொ-கு)

மரண அறிவித்தல்

மு. க. முத்தையா

கொக்குவில் இழ[illegible]கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் மு க முத்தையா காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி நல்லம்மா, சின்னையாவின் அன்புச் சகோதரரும், வேலாயுதபிள்ளை (கணக்காளர், லண்டன்), துரைராஜா (பொறியியலாளர், பெற்றோலியம் கூட்டுத்தாபனம்), தியாகராசா (இராமாட்சி மன்றம், கொக்குவில்), மணிமேகலாதேவி, சண்முகராஜா (பொறியியலாளர், லண்டன்), நவமணிதேவி, குணராசா, (பொறியியலாளர், லண்டன்), கலாரஞ்சினிதேவி, பரமசிங்கராஜா ஆகியோரின் தந்தையும் ராஜேஸ்வரி (லண்டன்), புஷ்பராஜலட்சுமி, ஈஸ்வரிதேவி, கனகசபாபதி (அஞ்சலகம், மன்னார்), பரமநாதன் (அஜந்தா ரெக்ஸின், யாழ்ப்பாணம்), பரமராஜசௌந்தரி (லண்டன்) ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை (12-09-79) புதன்கிழமை மாலை 4 00 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும். 3561

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49 Telegram Eelanadu
Phon: 389